# பாடம் 32: உறுதிபூசுதல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 5 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
கடந்த இரண்டு பாடங்களில், இயேசு கிறிஸ்துவால் தமது மணவாட்டிக்காக நிறுவப்பட்ட ஏழு அருளடையாளங்களைக் கத்தோலிக்கத் திருச்சபை கொண்டுள்ளது என்பதை நாம் கற்றோம். கிறிஸ்துவின் உடலாகியத் திருச்சபைக்குள் நுழைந்திட, ஒவ்வொரு நம்பிக்கையாளரும் பெற வேண்டிய முதல் அருளடையாளம் குறித்தும் கற்றோம். இந்த பாடத்தில் நாம், எல்லா நம்பிக்கையாளரும் பெற வேண்டிய மற்றோர் அருளடையாளம் பற்றி கற்போம்: உறுதிபூசுதல்.

**தற்போதைய பாடம்:**
1. திருமுழுக்கும் உறுதிபூசுதலும் உண்மையில் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். மரபின்படி, அவை இரண்டும் ஒருசேர வழங்கப்பட்டன, இந்த வழக்கம் கிழக்கத்தியக் கிறிஸ்தவர்களின் வழக்கத்தில் இன்றும் தொடர்கிறது. எவ்வாறெனினும், லத்தீன் ரீதி திருச்சபையில், இந்த இரண்டு அருளடையாளங்களும் பல நூற்றாண்டுகளாகப் பிரிந்துள்ளன, ஆகவே மழலையாக இருக்கும்போது திருமுழுக்கு வழங்கப்படுகிற ஒருவர், பிறகு பகுத்தறியும் வயதை எட்டியதும் உறுதிபூசுதல் பெறுவார்.

2. ஒருவரின் திருமுழுக்கிற்கு ஆற்றலளிக்கும் பிரிதொரு தருணத்தின் முக்கியத்துவத்தை மறைநூல் பத்திகள் சுட்டிக் காட்டுகின்றன:

*யோவான் 3:4*: "(நிக்கதேமிடம்) இயேசு, 'ஆமென், ஆமென், நான் உமக்குச் சொல்கிறேன், தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறக்காத எவரும் கடவுளின் அரசுக்குள் நுழைய முடியாது' என்றார்."

*திருத்தூதர் பணிகள் 8:14-18*: "சமாரியர்கள் கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொண்டனர் என்று திருத்தூதர்கள் கேட்ட பொழுது, அவர்கள் பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பினர், அவர்கள் சென்று, அவர்கள் தூய ஆவியைப் பெறவேண்டுமென அவர்களுக்காகச் செபித்தனர், ஏனெனில் அது அவர்களில் எவர் மீதும் பொழியப்படவில்லை; அவர்கள் ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்தனர். பிறகு அவர்கள் மீது திருத்தூதர்கள் கைகளை வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டனர்."

*திருத்தூதர் பணிகள் 19:1-6*: "அவர்கள் இதைக் கேட்ட பொழுது, அவர்கள் ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருமுழுக்கு பெற்றனர். மேலும் பவுல் அவர்கள் மீது (தமது) கைகளை வைக்கவே, தூய ஆவி அவர்கள் மீது வந்தது..."

3. கைகளை வைப்பதன் வழியாகத் தூய ஆவியாரின் கொடையை முத்திரையிடுதல் என்பதே உறுதிபூசுதலின் மறைநூல்சார் படியுரு ஆகும்:

*2 கொரிந்தியர் 1:21-22*: "கிறிஸ்துவில் உங்களோடு எங்களுக்குப் பாதுகாப்பு தருகிறவரும், எங்களைத் திருப்பொழிவு செய்கிறவருமாக கடவுள் இருக்கிறார்; அவர் எங்கள் மீது தமது முத்திரையைப் பதித்து, முதல் வைப்பாக எங்கள் இதயங்களில் ஆவியைப் பொழிந்துள்ளார்."

*எபேசியர் 1:13*: "உங்கள் மீட்பின் நற்செய்தியை, உண்மையின் வார்த்தையைக் கேட்டு, அவரில் நம்பிக்கை கொண்டுள்ள நீங்களும், வாக்களிக்கப்பட்டத் தூய ஆவியாரால் முத்திரையிடப் பெற்றுள்ளீர்கள்."

4. உறுதிபூசுதலின் வழமையானத் திருப்பணியாளராக ஆயர் இருக்கிறார், ஆனால் அவர் இந்த வகிநிலையை ஒரு குருவுக்கு வழங்க முடியும்.

5. உறுதிபூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதால் ஐந்து விளைவுகள் ஏற்படுகின்றன (கதிம 1303):
அ) நீங்கள் கடவுளின் பிள்ளை என்பதில் மிக ஆழமாக வேரூன்றுகிறீர்கள்.
ஆ) நீங்கள் மிக உறுதியாக கிறிஸ்துவில் ஒன்றிக்கிறீர்கள்.
இ) தூய ஆவியாரின் கொடைகள் உங்களில் அதிகரிக்கின்றன.
ஈ) கத்தோலிக்கத் திருச்சபையுடனான உங்கள் பிணைப்பு மிக நேர்த்தியாகிறது.
உ) விசுவாசத்திற்கு சாட்சியம் பகர்வதற்கு சிறப்பு வலிமை உங்களுக்கு வழங்கப்படுகிறது.

6. உறுதிபூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதால், ஒருவர் தூய ஆவியாரின் ஏழு கொடைகளைப் பெறுகிறார்:
அ) ஞானம்
ஆ) மெய்யுணர்வு (புரிதல்)
இ) அறிவுரைத்திறன்
ஈ) ஆற்றல் (துணிவு)
உ) நுண்மதி (அறிவு)
ஊ) இறையச்சம்
எ) இறைப்பற்று (பக்தி)

இந்த கொடைகள் தவிர்க்கப்படக் கூடாதவை. அவற்றை நன்றாகப் பயன்படுத்தினால் நாம் மிகுதியாகக் கனி தரலாம்.

7. கலாத்தியர் 5:22-23ல், தூய ஆவியாரின் கொடைகளைப் பயன்படுத்துவதன் விளைவாகக் கிடைக்கும் தூய ஆவியாரின் ஒன்பது கனிகளைப் புனித பவுல் பட்டியலிடுகிறார். இந்த கனிகள் தூய ஆவியாரின் பண்புகளில் இருந்து வருகின்றன, அவர் தூய திரித்துவத்தின் ஓர் ஆள் என்பதால், அவை கடவுளின் பண்புகளை வெளிப்படுத்துகிறவையாகவும் இருக்கின்றன. தூய ஆவியார் நமக்குத் தருகின்ற அருளோடு நாம் ஒத்துழைக்கும்போது, அவர் நமது வாழ்வில் இந்த கனிகளை அதிகரித்து, புனிதத்தில் நம்மை வளரச் செய்கிறார்.

அ) *அன்பு.* அதிகத் தன்னலமற்ற விதத்தில், நமது சொந்த நலன்களை அதிகம் நாடாமல் கடவுளையும் அடுத்திருப்பவரையும் அன்பு செய்கிறவர்களாக நம்மைக் காண்பது, மேலும் நமது பணிவிடையிலும் கொடுத்தலிலும் அதிகத் தியாகத்தோடு செயல்பட இயல்வது.
ஆ) *மகிழ்ச்சி.* நமது வாழ்வை ஆண்டவருடன் வாழ்வதில் அகநிறைவு மற்றும் இன்பமான உணர்வை நாம் அனுபவிப்பது. இந்த மகிழ்ச்சி ஒரு தற்காலிகப் பரவச உணர்வன்று, இது நாம் கடவுளோடு சரியாக இருக்கிறதை ஆழ்ந்து உணரும் நிலையான மகிழ்ச்சியாக இருக்கிறது. நற்செய்திக்காக நாம் வாழ்வின் நெருக்கடிகளில் துன்புற்றாலும் இது தொடர்ந்து நீடிக்கிறது.
இ) *அமைதி.* வாழ்வு கடினமாக இருந்தாலும், நோய், மக்களின் முறைகேடு போன்றவற்றால் நாம் அதிகம் துன்புற்றாலும், நமது புரிதலுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆழ்ந்த அமைதி உணர்வை நமக்குள் கொண்டிருப்பது. தமது தூய ஆவியாரின் வழியாக கடவுள் நம்மோடு இருக்கிறார், அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகமாட்டார் என்று அறிவதில் இருந்து இந்த அமைதி வருகிறது.
ஈ) *பொறுமை.* நமது திட்டங்களில் தடங்கல் அல்லது தாமதம் ஏற்பட்டால் நமது துன்பம் நீள்கிறது. நாம் காத்திருத்தலின் இக்கட்டு குறித்து குறைகூறாமலும் முணுமுணுக்காமலும் இருப்பது. நமது வேதனை தணிவதற்காக நாம் காத்திருக்க வேண்டும், அல்லது அது ஒருபோதும் தணியாவிட்டாலும், நாம் அதைத் தாங்கிக்கொள்ள வேண்டும், அது கடவுளின் நன்மைத்தனத்தின் மீதான நமது நம்பிக்கையைக் குறைக்க அனுமதிக்கக் கூடாது.
உ) *பரிவு.* நாம் மற்றவர்களிடம் நன்றாகவும் இரக்கத்துடனும் இருப்பது, எப்பொழுதும் அவர்களின் நலனையும் பயனையும் உயர்த்திப்பிடிக்கும் நோக்கம் கொண்டிருப்பது. உதவி, மாற்றீடு, ஓய்வு, ஆறுதல் தேவைப்படுவோருக்கு அவற்றைக் கொணர்கின்ற அளவுக்கு நாம் கூடுதலாகச் செயல்படுவது.
ஊ) *தாராளம்.* கடவுள் எப்பொழுதும் நமது தேவைகளை வழங்குவார் என்பதை நம்மால் நம்ப இயலுகிறது, அதன் விளைவாக, நம்மிடம் இருக்கிறவற்றைப் பிறரோடு பகிர்வதில் கஞ்சத்தனம் இல்லாதிருப்பது. உண்மையில், நமது ஆசிகளை மற்ற மக்களோடு பகிர்வதில் நாம் மகிழ்ச்சியும் பொருளும் காண்கிறோம்.
எ) *நம்பகத்தன்மை.* நமது குடும்பம், நண்பர்கள் மற்றும் உற்றவர்களுக்கு நாம் உண்மையாக இருப்பது. எல்லாற்றிலும் மேலாக, நற்செய்தி வாழ்வின் அழைப்புக்கு உண்மையாக இருப்பது. தூய ஆவியார் எப்பொழுதும் நம்மை விட்டு விலகாமல் நம்மோடு இருக்கிறது போன்று, நாமும் அவர் பக்கம் தொடர்ந்திருந்து அவரது வழிகாட்டலுக்கு எப்பொழுதும் பணிந்திருப்பது.

ஏ) *கனிவு*. நாம் மற்ற மக்களை நடத்துவதில் முரட்டுத்தனமாக அல்லது கடினமாக இல்லாதிருப்பது. மாறாக, அவர்களை நேர்மறை உணர்வோடு அணுக வேண்டும், எப்பொழுதும் அவர்களது உடல், உள்ளம் மற்றும் உணர்ச்சிசார் தேவைகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் கடவுளிடமும் மற்ற மக்களிடமும் மென்மையாக இருக்க வேண்டும், மக்களை எப்பொழுதும் மாண்புடன் நடத்த வேண்டும், நமது செயல்களாலும் சொற்களாலும் அவர்களை இழிவுபடுத்தக் கூடாது.
ஐ) *தன்னடக்கம்*. நாம் வாழ்வின் பல்வேறு சூழல்களில், பசி அல்லது கோபம் அல்லது அவசரநிலைகளில், நமது உணர்ச்சிகள் மற்றும் நமது பொறுப்புகளைக் கையாளுந்திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தூய ஆவியார் நம்மில் இருந்து வாழ்வின் எல்லா சூழல்களின் மீதும் ஆட்சி செலுத்துகிறார் என்று ஆழ்ந்து அறிந்துள்ளதால், நாம் தொடர்ந்து அமைதியாகவும் கட்டுப்பாடாகவும் இருக்கிறோம்.

புனித தாமஸ் அக்குவினாஸ் (13ஆம் நூற்றாண்டு), புனித பவுலின் பத்தியில் காணப்படும் ‘‘கனிகள்’’ என்றச் சொல்லின் கிரேக்கப் பதம் (*கார்ப்போஸ்*) உண்மையில் பன்மையாக அன்றி ஒருமையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். எனவே, இது உண்மையில் தூய ஆவியாரின் கனிகள் என்பதை விட *கனி* என்று இருக்க வேண்டும். இந்த ஒன்பது தரங்களும் தூய ஆவியாரின் ஒரே கனியின் வேறுப்பட்ட வெளிப்படுத்தல்கள், அல்லது பண்புநலன்களாக இருக்கின்றன. தூய ஆவியாரால் நிரப்பப்பட்டுள்ளதன் விளைவாக, அவற்றில் எதுவும் நம்மில் காணப்படும் பண்புநலன்களின் பட்டியலில் இருந்து விலக்கப்படக் கூடாது.

8. உங்கள் கத்தோலிக்க வாழ்வின் ஒரு புள்ளியில், புகுநிலை அருளடையாளங்களுக்குப் பிறகு மற்றொரு திருமுழுக்கு இருப்பது போன்று, ‘‘தூய ஆவியாரில் திருமுழுக்கு’’ அல்லது ‘‘தூய ஆவியாரின் திருமுழுக்கு’’ என்றப் பதத்தை கத்தோலிக்கத் திருச்சபையின் சில குழுக்களில் கேட்கச் சாத்தியமுள்ளது. ஒரு நபரை கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையின் எய்துபணியை முழுமையாகப் பகிர்வதில் நற்செய்தி வாழ்வை வாழ்வதற்கான ஆற்றலளிக்கத் தூய ஆவியாரை நாடும் கத்தோலிக்கத் திருச்சபையின் அலுவல்சார் செபமாக உறுதிபூசுதல் ஏற்கெனவே இருக்கிறது. உறுதிபூசுதல் சடங்கில் இது பிரதிபலிக்கிறது:

‘‘எல்லாம் வல்லவரான கடவுளே, எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தையே, தண்ணீராலும் தூய ஆவியாராலும் உமது மகன்களையும் மகள்களையும் பாவத்தில் இருந்து விடுவித்து, அவர்களுக்குப் புதிய வாழ்வை அளித்தீர். அவர்களுக்கு உதவுகிறவராகவும் வழிகாட்டியாகவும் இருக்குமாறு அவர்கள் மீது உமது தூய ஆவியாரை அனுப்பியருளும். ஞானம் மற்றும் மெய்யுணர்வின் ஆவியை, நல்ல ஆலோசனை மற்றும் துணிவின் ஆவியை, நுண்மதி மற்றும் இறைப்பற்றின் ஆவியை அவர்களுக்கு அளித்தருளும். உமது நிகழ்மையில் பெருவியப்பு மற்றும் இறையச்சத்தின் ஆவியால் அவர்களை நிரப்பியருளும்.’’